Registered as a Newspaper

பக்கங்கள் 16

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 143

செவ்வாய்க்கிழமை 18 ஏப்ரல் 2023

சித்திரை 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## அனைத்துச் சட்டத்தரணிகளும் முன்னிலையாக முன்வாருங்கள்

### ஈ.சரவணபவன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
அனைத்துச் சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் இன்று முன்னிலையாக முன்வாருங்கள் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் அழைப்பு விடுத்துள்ளார். »15

அன்னைபூபதி நினைவுநாளில்

## இனவழிப்புக்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி, ஏப். 18
தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் இனவழிப்புக்கு எதிரான அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி சேவைச்சந்தை வளாகத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.
தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்தல், »15

பண்ணையில் நாகபூஷணி:

# அம்மன் சிலையை அகற்றவேண்டாம்!

## நீதிமன்றில் இந்து அமைப்புக்கள் இன்று ஓரணியாக முன்னிலையாவர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
தீவகத்தின் நுழைவாயிலாகவுள்ள பண்ணை சுற்றுவட்டத்துக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள நாகபூஷணி அம்மன் சிலையை அகற்ற வேண்டாம் என்று கோருவதற்கு இந்து அமைப்புக்கள் ஒன்றுகூடித் தீர்மானித்துள்ளன. »15

பௌத்தமயமாக்கல், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்:

## தமிழர் தாயகம் முழுவதும் 25 இல் 'ஹர்த்தால்'

### நாடாளுமன்றத்துக்குள்ளே எம்.பி.க்கள் மறியல்போர்

யாழ்ப்பாணம், ஏப். 18
தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை நிறுத்தக்கோரியும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதை நிறுத்தக்கோரியும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் முழு »15

13ஆவது திருத்தம்

## முழுமையாக நடைமுறையானால் வரலாறு காணாத இனக்கலவரம்

### எச்சரிக்கிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஏப். 18
13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான அமைச்சரவை உபகுழுவும் நியமிக்கப்பட்டுள்ளது, இதனைக் கைவிட வேண்டும். அதனையும் மீறி »15

## பாம்புக்கடியால் பறிபோனது உயிர்



முல்லைத்தீவு, ஏப். 18
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவின் »15

## ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு



யாழ்., ஏப். 18
மல்லாகத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் ரயிலுடன் மோதியதில் முதியவர் »15

13ஆவது திருத்தம் தொடர்பில்

## சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள ஆளுநர் - விக்னேஸ்வரன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
13ஆவது திருத்தம் தொடர்பில் தனக்குள்ள தெளிவற்ற விடயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும், அதன் நடைமுறையிலுள்ள சவால்கள் தொடர்பிலும் வடக்கு »15



## தீயில் எரிந்து பெண் சாவு!

### இறப்புத் தொடர்பில் உறவினர்கள் சந்தேகம்

வலி.வடக்கு முன்னாள் தவிசாளரிடம் பொலிஸ் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப். 18
வலி. வடக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தனின் வீட்டுக்கு முன்பாக, தீயில் எரிந்து பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இதையடுத்து, வலி.வடக்கு பிரதேசசபையின் முன்னாள் தவி »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ. 112,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A-" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனத்தின் இருப்பென்பது நிலத்தின் இருப்பிலும் உள்ளது!

## தந்தை செல்வா நினைவுரையில் ஈ.சரவணபவன் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஏப்ரல் 18**

**தந்தை செல்வா அன்று சொன்னதைப் போன்று எமது இனத்தின் பாதுகாப்பு எமது நிலத்திலும்தான் தங்கியிருக்கின்றது. அதனால்தான் எமது நிலத்தை இன்று வெவ்வேறு வடிவங்களில் கபளீகரம் செய்கின்றார்கள் இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன்.**

வலி. மேற்குப் பிரதேசசபையில் தந்தை செல்வா நினைவுதின நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை சுதந்திரமடைய முன்னதாக, 1947ஆம் ஆண்டு திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டத்தில் தந்தை செல்வா சமஷ்டி ஆட்சி முறை தான் இலங்கைக்குப் பொருத்தமானது எனவும் சிங்களவர்களை நம்ப முடியாது என்றும் உரையாற்றியிருந்தார். 1951ஆம் ஆண்டு திருமலை மாநாட்டில் உரையாற்றிய தந்தை, 'இன்று கந்தளாயில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. இது நாளை பதவியா, வவுனியா, மன்னார் என விரிவுபடுத்தப்படமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனக் கேள்வி எழுப்பியிருந்தார். அவரது கேள்வியின் தாற்பரியத்தை இன்று நாம் கண்ணூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம். மாகாணசபையைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இன்று நாம் இருக்கிறோமென்றால் எம்மிடம் ஒழுங்கான தலைமைத்துவம் இல்லையென்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

தந்தையின் காலத்தில் தமிழ் அரசுக் கட்சி எப்படி இருந்தது? இன்று அப்படியா இருக்கின்றது? ஒவ்வொருவரும் தாங்கள்தான் தலைவர் என்று புறப்பட்டதால்தான் கட்சி சீரழிந்து செல்கின்றது. ஜனநாயகக் கட்சிக்குள் கருத்து மோதல்கள் ஆரோக்கியமானதுதான். ஆனாலும் அது எல்லைதாண்டும் போது கட்சியைப் பாதிப்பதுபற்றி யாரும் கவலைப்படவில்லை. இன்று எந்தப் பிரச்சினைக்காக நாம் போராடுவது என்று தெரியாமல் தடுமாறுகின்றோம். ஒரு பிரச்சினை முடிவதுக்குள் அடுத்த பிரச்சினை என்று எல்லாமும் தொடர்கதையாகியுள்ளன. இதை எப்படி வெல்லப்போகின்றோம். எங்கள் தலைமைகளிடம் திட்ட வரைபடம் உண்டா? நாம் தொடர்ச்சியாக எம் மீதான ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகக் குரல்கொடுகின்றோம். ஆனாலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. நாமும் தந்தை சொன்னதைப்போன்று தமிழர்களை கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்று சொல்லப்போகின்றோமா? தந்தை அவ்வாறு கூறுவதற்கு தகுதியிருந்தது. அவர் போராடி முயன்றுபார்த்துத்தான் அதைச் சொன்னார். நாம் இன்று எதையும் முயற்சிக்காமல் வெறும் ஊடக அறிக்கைகளுடன் வாய்வீரத்துடனும் இருந்து கொண்டு அப்படிச் சொல்லப்போகின்றோமா? இனத்தை முன்னிறுத்தி செயலாற்ற வேண்டும். தந்தை பயணித்த பாதையில் நாமும் பயணிப்போம் - என்றார். (ம)

# இலவச அரிசிப் பொதிகள் 2ஆம் கட்டம் விரைவில்!

யாழ்ப்பாணம், ஏப். 18

பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான அரிசிப்பொதிகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுகின்றன. முதலாம் கட்ட விநியோகத்தில் 98 வீதம் முடிவடைந்துள்ளது.

இறப்பு மற்றும் வேறு இடம் மாறியோரின் விவரங்கள் திரட்டப்பட்டு அவர்களுக்கான அரிசிப்பொதிகள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன. புதிய பதிவுகளுக்கு விநியோகம் இடம்பெறவில்லை என தென்மராட்சி பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (ச-9)

பணம், நகையுடன்

# தலைமறைவான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 18

தாலிக்கொடி செய்து தருவதாகத் தெரிவித்து நகை மற்றும் பணத்தைப் பெற்றுக்கொண்டு தலைமறைவான நகைத் தொழிலாளி ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணத்துக்கு தாலிக்கொடி செய்வதற்கு நகைத் தொழிலாளியிடம் 12 இலட்சம் ரூபா பெறுமதியான நகையும் பணமும் கொடுக்கப்பட்டுள்ளது. திருமணத்துக்கு முதல்நாள் தாலிக்கொடியை செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். மாதிரிப் படங்களையும் காண்பித்துள்ளார். திருமணத்துக்கு முதல்நாள் கடைக்குச் சென்று பார்த்தபோது கடை மூடப்பட்டிருந்ததுடன் நகைத் தொழிலாளி தொலைபேசித் தொடர்பையும் துண்டித்துள்ளார்.

யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டதையடுத்து யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணரோயன், தலைமறைவாகியிருந்த சந்தேகநபரை நேற்றுக் கைது செய்துள்ளார். (ஓ-26)

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை முன்மொழிவோருக்கும் ஆபத்தே!

## சமத்துவக் கட்சி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 18

அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாட்டின் வளர்ச்சியை மறுதலித்து நாட்டு மக்களை நெருக்கடிக்குள்-கொந்தளிப்புக்குள் உள்ளாக்கும் அபாயகரமான சட்டமாகவே உள்ளது. இந்தச் சட்டத்தின் பாரதூரத்தன்மையை கொண்டுவந்தோரும், முன்மொழிந்தோரும்கூட ஆட்சிமாற்றம் இடம்பெற்றால் அனுபவிக்கநேரிடும் -இவ்வாறு சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் அபாயகரமான சட்டமாகவே உள்ளது. மக்களின் வாழும் உரிமைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன், கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. நீதித்துறையையும் பலவீனப்படுத்துகிறது. எனவே இந்தப் புதிய பயங்கரவாதச் சட்டத்தை நாட்டின் மேம்பாட்டிலும் பாதுகாப்பிலும் கரிசனை கொண்ட அனைவரும் மறுதலித்து எதிர்க்க வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# மரணத்தை ஏற்படுத்தக்கூடிய வெப்பம் பேராசிரியர் கருணாதிலக எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 18

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை மரணத்தை ஏற்படுத்தக்கூடியது. குழந்தைகள், முதியவர்கள், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வெயிலில் அதிக நேரத்தை செலவிடுபவர்கள் மிகமிக அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் இந்திக கருணாதிலக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நிலவும் மிகவும் வெப்பமான காலநிலை குழந்தைகளை, முதியவர்கள் மற்றும் அதிகளவில் வெயிலில் அன்றாடச் செயற்பாடுகளில் அல்லது தொழிலில் ஈடுபடக்கூடியவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். எனவே இந்தக் குழுவினர் அநாவசியமாக வெயிலில் செல்வதை நிச்சயம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இவர்கள் உள்ளிட்ட ஏனைய அனைவரும் வெப்பத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஆடைகளை அணியும் போதும் இள நிறத்தில் அணிவது பொருத்தமானதாகும். அத்தோடு அதிகளவில் நீர் அருந்துதல் மிக முக்கியத்துவமுடையதாகும். எனவே நாளொன்றுக்கு சுமார் இரண்டரை லீற்றர் நீர் அருந்துதல் மிகமிக அவசியமாகும்.

நீர் ஆகாரங்கள் அல்லது நீர் தன்மையுடைய உணவுகளை அதிகளவில் உட்கொள்ள வேண்டுமே தவிர, குளிர்பானங்களை அளவுக்கதிகமாக அருந்துவது பொருத்தமற்றது. இதன் காரணமாக ஏனைய பாதிப்புக்கள் ஏற்படக் கூடும். அதிக வெப்பம் காரணமாக மயக்கம், சோர்வு மற்றும் வாந்தி உள்ளிட்ட நோய் அறிகுறிகள் ஏற்படக்கூடும். திடீரென இவ்வாறான நோய் அறிகுறிகள் தென்படுபவர்கள் உடனடியாக மருத்துவர்களை நாட வேண்டியது அவசியமாகும் - என்றார். (ம)

# கடற்படையின் புலனாய்வாளர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவு கோத்தாபய கடற்படைத் தளத்தில் பணியாற்றும் கடற்படைப் புலனாய்வாளர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது என கடற்படையினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. உயிரிழப்புத் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜிதவுக்கு வழங்கினால் ரோஹிதவுக்கும் வழங்குக

## அமைச்சரவை நியமனங்களில் முரண்டு பிடிக்கிறது பெரமுன

**கொழும்பு, ஏப்.18**

**ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால், அதே மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவுக்கும் அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் என்று பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ரோஹிதவுக்கு வழங்காது ராஜிதவுக்கு மட்டும் அமைச்சுப் பதவியை வழங்கக்கூடாது என்று ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரோஹித அபேகுணவர்த்தன கட்சியின் வளர்ச்சிக்காக அதிக அர்ப்பணிப்புகளை மேற்கொண்டவர். அதனால் ராஜித சேனாரத்னவுக்கு மட்டும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால் அது பெரும் அநீதி என ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளது என்று கூறப்படுகின்றது.

ராஜித சேனாரத்ன விரைவில் புதிய அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாராகவுள்ளார் என்று கடந்த சில வாரங்களாக பல் வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதுதொடர்பில் விளக்கமளிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி, ராஜிதவுக்கு உத்தரவிட்டுள்ளதுடன், விடயம் தொடர்பில் ஆராய தனிக்குழு ஒன்றையும் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## கடன்தவணையை நீடித்தது பங்களாதேஷ்

கொழும்பு, ஏப்.18

இலங்கை தனது கடனை மீளச் செலுத்துவதற்கான காலத்தை, பங்களாதேஷ் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்துள்ளது.

இலங்கைக்கு, பங்களாதேஷ் 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கியுள்ளது. இலங்கை மத்திய வங்கி இந்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அதன் முதல் தவணையை வழங்க பங்களாதேஷிடம் கால அவகாசம் கோரியிருந்தது. அந்தக் காலப்பகுதிக்குள் இலங்கை கடனை மறுசீரமைக்க முடியும் என்று நம்பியிருந்த போதும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது இலங்கை மேலும் 6 மாத கால அவகாசம் கோரியுள்ளது. இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்குள் அதன் முதல் தவணையையும் செப்ரெம்பர் மாதத்துக்குள் மற்றொரு தவணையையும் செலுத்தப்படும் என்று இலங்கை உறுதியளித்துள்ளது என பங்களாதேஷ் வங்கியின் ஆளுநர் அப்துர் ரஃப் தாலுக்டர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கால நீடிப்புக்கு அப்பால் கால நீடிப்புக்கு அவசிமில்லை என்று இலங்கை மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள தாலுக்டர், கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் நீட்டிக்கப்பட்டால், அது இலவசம் அல்ல. மேலும் கடனுக்கான வட்டி இணைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கை, 2021ஆம் ஆண்டு மே மாதம் இந்த நிதியை கடனாகப் பெற்றது. கடும் நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கியபோது 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாது என அறிவித்தது. அதன்பின்னர் பங்களாதேஷ், கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை இலங்கைக்கு மூன்று முறை நீடித்துள்ளது. (எ-இ)

## 26 வாகனங்கள் மோதி விபத்து!

கொழும்பு, ஏப். 18

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வரிசையாக வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஏறக்குறைய 26 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. வாகனங்களுக்கு இடையே இடைவெளி விடாமல் பயணித்தமையே இந்த விபத்துக்குக் காரணம் என நெடுஞ்சாலை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் வாகனங்கள் சேதம் அடைந்தாலும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## மீண்டும் ஒன்றிணையுங்கள் பீரிஸுக்கு பெரமுன தூது!

கொழும்பு, ஏப்.18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியை பொறுப்பேற்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு பெரமுன அழைப்பு விடுத்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து டலஸ் தரப்புடன் இணைந்து பீரிஸும் வெளியேறியிருந்தார். தற்போது அவர்கள் சுதந்திர மக்கள் சபை எனும் கட்சியை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றனர். அதையடுத்து தவிசாளர் பதவியில் இருந்து பீரிஸ் நீக்கப்பட்டுள்ளார் என்று மொட்டுக் கட்சி அறிவித்திருந்தது.

தற்போது பீரிசுக்கு, மொட்டுக் கட்சி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது எனவும், இது தொடர்பில் அவர் இன்னும் பதிலளிக்கவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் பண்ணையடியில ஆரோ கொண்டந்து வைச்ச நாகபூசணி அம்மன் சிலைதான் இப்ப 'ட்ரெண்டிங்கில' போய்க்கொண்டிருக்கு. புத்தர் சிலைக்குப் பொங்காத பொலிஸ், அம்மன் சிலைக்கு மட்டும் மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்பு மாதிரி பரபரக்கிறதுக்குப் பின்னால நயினாதீவு விகாராதிபதி எண்டுதான் பரவலாக் கதை அடிபடுகுது.

எங்கேயோ இருக்கிற நயினாதீவு விகாராதிபதிக்கு யாழ்ப்பாணம் ரவுனுக்குள்ள சிலைவைச்சால் ஏன் இவ்வளவு அந்தரம் வரவேணும் எண்டு நீங்கள் யோசிக்கலாம். அதுக்குக் காரணம் இருக்கு. இப்ப மெல்ல மெல்ல நயினாதீவை, ஒரு சிங்கள பௌத்த ஏரியாவா மாத்துறதில அந்த விகாராதிபதி கடுங்கவனமா இருக்கிறார். எண்டாலும், அம்மன்ர புகழை அவரால அசைக்க ஏலாம இருக்கு. சனி, ஞாயிறிலயும் லீவு நாளிலையும் தான் விகாரைக்கு சனம் வருகுது. ஆனால் எல்லா நாளும் அம்மன் கோயில்ல திருவிழா மாதிரிக் கூட்டம் தான். அதைவிட விகாரைக்குப் போற சிங்களச் சனங்களும் அப்பிடியே அம்மனையும் வந்து கும்பிட்டுட்டுத்தான் போவினம். இதெல்லாம் விகாராதிபதிக்கு கடுப்பு. விகாரைக்கு வாற சனங்களை அம்மன் கோயிலுக்குப் போகாதிங்கோ எண்டு மறிக்க ஏலாமல், கையைப் பிசைஞ்சு கொண்டு நிப்பாராம். எண்டாலும் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் மாதிரி, குறிகாட்டுவானில ஒரு புத்தர் சிலையை வைச்சு, நயினாதீவு புத்தருக்குத்தான் சொந்தம் எண்டமாதிரியான நினைப்பை உருவாக்கலாம் எண்டு நினைச்சிருக்கிறார் .அதுக்கான வேலையளும் அறம்புறமா நடந்து கொண்டிருக்குது.

இப்பிடியான நிலைமையிலதான் நாகபூசணி அம்மனின்ர சிலையொண்டு பண்ணையடியிலை வைபட்டிருக்கு. தீவகத்தை தவிர வேற இடத்து ஆக்கள் நயினாதீவுக்கு போகவேணுமெண்டால், பண்ணையடியைக் கடந்துதான் போகவேணும். அதில அம்மன் சிலையை வைச்சால் , நயினாதீவுக்கு போறவைக்கு அந்த இடம் அம்மன்ர இடம் எண்டதுதானே மனதுக்க பதியும். அதுக்காகத்தான், பிக்குவின்ர பிளானை முறியடிக்கத்தான் இந்த அம்மன் சிலையை ஆரோ வைச்சிருக்க வேணும். தன்ர திட்டத்தில இப்பிடி மண்ணள்ளிப் போட்டதாலதான் பிக்குவுக்கு சரியான கோபம். உடனேயே ஆள் மேல்மட்டத்துக்கு ரெலிபோனில விசயத்தைச் சொல்லி, அம்மன் சிலையை அப்புறப்படுத்தோணும் எண்டு அடம்பிடிச்சிருக்கிறாராம். அந்த அழுத்தத்திலதான், பொலிஸ்காரர் இப்பிடிப் பதறியடிச்சுக் கொண்டு சிலையை எடுக்கிறதுக்கு ஓடித் திரிஞ்சிருக்கினம்.

ஏற்கனவே தேசிய வெசாக் கொண்டாட்டத்தை நயினாதீவில நடத்தி, புத்தரின்ர பூமியா அதை அப்பிடியே மடக்கிப் போடலாமெண்டிருந்த பிக்குவின்ர பிளானுக்கு கொரோனாவும், பொருளாதார நெருக்கடியும் எப்பிடி மண்ணள்ளிப் போட்டுதுகளோ, அதேவேலையை இப்ப ஒரு அம்மன்சிலை செய்திருக்குப் பாருங்கோ.



- பட்சி


# ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஏப். 18

கோண்டாவில் கிழக்கு நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், மாதர் சங்கம் மற்றும் பாலர் பாடசாலை என்பன இணைந்து 71ஆவது ஆண்டு நிறைவு விழாவையும் இல்ல மெய்வல்லுநர் போட்டியையும் நடத்தி வருகின்றன.

சிறி நாராயணா சனசமூக நிலையத்தலைவர் ந.சிவாஸ்கர் தலைமையில் கடந்த 14 ஆம் திகதிமுதல் இந்த நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

சிறி நாராயணா சனசமூக நிலைய முன்றிலில் தினமும் மாலை 4 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. (ம)



# கட்டாக்காலிகளால் விபத்துகள் அதிகம்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகள் கூட்டம் கூட்டமாக நடமாடுகின்றமையால் விபத்துகள் அதிகரித்துள்ளன. அதிலும் குறிப்பாக இரவு வேளைகளில் நிலைமை மேலும் மோசமாகவுள்ளது என்று பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: கிளிநொச்சி மாவட்ட வீதிகளில் இரவு வேளைகளில் கால்நடைகள் கூட்டமாகச் சுற்றித்திரிகின்றன. பொது இடங்கள், வர்த்தக நிலையம் மற்றும் சந்தைகள் போன்ற பகுதிகளையும் தமது இருப்பிடங்களாகப் பயன்படுத்தி வருகின்றன. இதனால் விபத்துகள் அதிகரித்துள்ளன.

இதுதொடர்பில் கரைச்சிப் பிரதேசசபைக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தி விபத்துகளை தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-113)

# ஓட்டோச் சேவைகளுக்கான கட்டணம் எப்போது குறையும்

*வடக்கு மாகாண ஆளுநருக்கு,*




ஐயா! நீங்கள் ஆளுநராகப் பதவியேற்றதையிட்டு மகிழ்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். ஒரு தமிழன் வடமாகாண ஆளுநராக வருவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் நீங்கள் ஆளுநராக பதவியேற்ற நாள் முதல் சர்ச்சைகளில் சிக்கிவருகிறீர்கள். இந்த சர்ச்சைகளைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வரவில்லை. யாழ்ப்பாண மக்கள் சார்பில் தங்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். தெற்காசிய மக்களைப் பொறுத்த வரையில் முச்சக்கரவண்டி ஏழைகளின் வாகனம் என்பது உங்களுக்குத் தெரியுமோ தெரியாது. நீங்கள் உங்களது வாழ்நாளில் எப்போதாவது முச்சக்கரவண்டியில் ஏறியிருப்பீர்களோ தெரியாது. ஆனால் முச்சக்கரவண்டி இலங்கையர்கள் உட்பட தெற்காசிய ஏழை மக்களின் வாகனம் என்பது அனைவருக்கும் தெரியும்.

யாழ்ப்பாணத்தில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் தவிச்ச முயல் அடிப்பது பற்றி யாழ்ப்பாண மக்களைக்கேட்டால் விலாவாரியாக எடுத்துக்கூறுவார்கள். மாவட்டச் செயலராக வேதநாயகன் இருந்தபோது யாழ்ப்பாண முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பூட்டும் நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் கட்டண விவரங்களையும் நிர்ணயித்தார். எல்லாம் கொஞ்ச நாள் தான். பிறகு ஒன்றையும் காணவில்லை. அண்மையில் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் 'கியூ.ஆர்' முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண முச்சக்கர வண்டிச் சாரதிகள் கண்ணை மூடிக்கொண்டு தாங்கள் நினைத்தவாறு கட்டணங்களை அறவிடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோமீற்றருக்கு அல்லது ஆகக் குறைந்த கட்டணமாக 250.00 அறவிடுகின்றனர்.

அண்மையில் எரிபொருள்களின் விலை குறைக்கப்பட்டதையடுத்து 'pick me' நிறுவனம் கட்டணத்தை கிலோமீற்றருக்கு 68.00 ரூபாவாகக் குறைந்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 'கப்' ரக வாகனங்கள் 68.00 ரூபாவுக்கு சேவை வழங்க முடியுமானால் முச்சக்கர வண்டிகளால் ஏன் முடியாது . 'மாகாண ஜனாதிபதி' போல விளங்கும் உங்களால் யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த முடியாதா? நீங்கள் இந்த விடயத்தைச் செய்தால் வட மாகாண மக்கள் அனைவரும் தங்களுக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பார்கள். செய்வீர்களா?

**யாழ்ப்பாண மக்களின் சார்பில்**
**மு.கந்தையா**



# நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஏப். 18

சப்ரகமுவ, மேல், மத்திய, தென், வடமேல், ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது: புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். காங்கேசன்துறையிலிருந்து மன்னார், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்று தென்மேற்குத் திசையில் வீசுவதுடன், காற்றின் வேகமானது மணிக்கு 20-30 கிலோமீற்றராகக் காணப்படும் - என்றுள்ளது. (ம)

# 'அரசு ஆட்சி, அதிகாரம்' நூல் வெளியீடு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஏப். 18

அருட்தந்தை லூக் ஜோன் எழுதிய 'அரசு ஆட்சி, அதிகாரம்' நூல் வெளியீடு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் ஆசியுரையை தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி பத்மதயாளன், அறிமுக உரையை கலாநிதி ரி.எஸ். யோசுவா, நூல் ஆய்வுரையை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் மற்றும் அருட்தந்தை எம்.யூட்சுதர்சன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் ஏ.சி.தவரஞ்சித் பெற்றுக்கொண்டார். சூழமைவுசார் புதிய ஏற்பாட்டுப் பின்னணியில் தற்போதைய இலங்கை அரசியலையும் இனங்களிடையே நடைபெறும் [illegible]வாதங்கள், ஒடுக்குமுறைகள் தொடர்பிலும் ஆய்வுசெய்து எழுதப்பட்ட நூலாக இந்த நூல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-214)

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.



**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்தஉதவிகிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.



**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில்பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். கவனம்தேவை. உற்சாகமாகக்காணப்படுவீர்கள்.



**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்னைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**கன்னி:** பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வழிபாடு நலம் சேர்க்கும்.



**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மன வருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.



**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். பிரச்சினைகள் நீங்கும்.



**கும்பம்:** மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரணையாக நடந்து கொள்ள முயற்சி செய்யவும். பிரச்சினைகள் ஏற்படும்.



**மீனம்:** சிந்தித்துச்செயற்படவேண்டிய நாள். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெங்கு என்று மீளெழும்?

**யா**ழ்ப்பாணத்திலுள்ள தென்னைமரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளது. வெள்ளை ஈக்கள் தேங்காய்களின் உற்பத்திக்கு மிகையான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியவை. இதன் தாக்கம் இலங்கையில் நீண்டகாலமாக இல்லாதிருந்த நிலையில், தற்போது யாழ்ப்பாணம், களுத்துறை, கம்பஹா, திருகோணமலை, கொழும்பு, குருநாகல், கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகள் இடர்பாட்டுக்குரிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதை 'பேராபத்தான நோய்நிலை' என்று அடையாளப்படுத்தியிருக்கின்றது தெங்கு ஆராய்ச்சி நிலையம். தெங்கு ஆராய்ச்சி நிலையம் பட்டியலிட்டுள்ள இடங்களில் பெரும்பாலானவை தெங்கு முக்கோண வலயத்துக்குள் உள்ளடங்குகின்றன. ஆதலால், இந்த நோய்நிலையை விரைந்து கட்டுப்படுத்தப் படாவிடின் அது நாட்டின் தேசிய தெங்குற்பத்தியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது கசப்பானதும் மறுக்கப்பட முடியாததுமான உண்மையாகும்.

நான்கு பக்கமும் கடன்கள் சூழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் இலங்கைத்தீவு, கடன் மறுசீரமைப்புக்களையும் தற்காலிகக் கடனுதவிகளையும் மட்டுமே நம்பிக் கொண்டு காலத்தைக் கடத்திவிட முடியாது. மாறாக 'பொருளாதார உறுதிப்பாடு' என்ற நிலையை எவ்வளவுக்கெவ்வளவு விரைந்து இலங்கை ஏற்படுத்துகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த நாடு கடன் சுமையில் இருந்து மீட்சிபெறும். இந்தப் பொருளாதார உறுதிப்பாட்டை அடைய வேண்டுமாயின் முதலில் தன்னிறைவு காணவேண்டிய துறைகளை இனங்கண்டு அவற்றைப் பலப்படுத்தவேண்டும். இலங்கை தன்னிறைவு காணக்கூடிய ஏதுநிலைகள் உள்ள துறையாக 'தெங்கு' காணப்படுகின்றநிலையில் இந்த விடயத்தில் விரைந்து செயற்படவேண்டிய தவிர்க்கமுடியாத்தனம் அரசாங்கத்துக்கு அதிகமாகவே இருக்கின்றது.

இதேவேளை – வெள்ளை ஈக்கள் மட்டும்தான் தெங்குத்துறை எதிர்கொள்ளும் ஒரேயொரு அச்சுறுத்தலா? என்ற கேள்வியும் இங்கு எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது. ஏனெனில், நீண்டகாலமாக இடம்பெற்ற போரால் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஏராளம் தென்னைகள் அழிவடைந்தன. குறிப்பாக வடக்கில் தென்னை அதிகமாகப் பயிரிடப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்த 90 வீதமான தென்னை மரங்கள் 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கையின்போது படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'மல்ரிபரல் எறிகணை' தாக்குதல்களால் தலையிழந்துபோயின. போரின் பின்னரும் கூட எஞ்சிய தென்னைகளைப் பாதுகாக்கவும், அழிவடைந்த தென்னைகளுக்கு மாற்றாக தேசிய ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் அரசு தவறியிருந்தது. மண்ணுக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்காகவும், போரில் கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாகவும் நடுகை செய்யப்பட்ட தென்னைகளைத் தவிர வேறெந்தப் பெருந்திட்டமும் வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படவில்லை.


இலங்கையைவிடவும் மிகச்சிறிய மாலைதீவு உலகின் பல நாடுகளுக்கும் தெங்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யுமளவுக்கு தன் உற்பத்திகளைப் பெருக்கியிருக்கின்றது. ஆனால், மாலைதீவை விடவும் மிகநீண்ட கடலோரங்களையும் நிலப்பரப்பையும் மனித வளத்தையும் கொண்டிருக்கும் இலங்கையால் இந்தத் துறையில் தனக்கென என்ன முத்திரையைப் பதிக்கமுடிந்தது. கோத்தாபய அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு மாகாணம் இலங்கையின் மூன்றாவது தெங்கு முக்கோண வலயமாக அறிவிக்கப்பட்டது. கோத்தாபய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட விரல்விட்டு எண்ணக்கூடிய நல்ல திட்டங்களில் இதுவுமொன்று. ஆனால், இந்த அறிவிப்பின் பின்னரான செயற்பாட்டு நடவடிக்கை என்ன?

வெள்ளை ஈக்கள் பேராபத்தானவை. அவை உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட, அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஆனால், அந்த ஈக்களின் தாக்கத்தைவிடவும் ஆகப்பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் தன் இயலாத்தன்மை தொடர்பிலும் சுயபரிசீலனையை மேற்கொள்ளவேண்டும். டொலர் வருவதற்கான கதவுகளை அடைத்துவிட்டு கடன்கள் தொடர்பில் சிந்திப்பதால் யாருக்கு என்ன பயன்?

நாளொரு நல்வார்த்தை

"அன்பும் இரக்கமும் நிறைந்த இதயமே மன வலிமை, மன உறுதி, மகிழ்ச்சி மற்றும் மன அமைதிக்கான முக்கியமான ஆதாரமாகும்"

– தலாய் லாமா




# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்; அரச எதிர்ப்பாளர்களே இலக்கு

### சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப்.18**

**அரச எதிர்ப்பாளர்களுக்கு 'பயங்கரவாதிகள்' முத்திரையைக் குத்தி அவர்களை வேட்டையாடுவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது. இந்தச் சட்டமானது ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சட்டவரைவை ஆராயும்போது ஒரு விடயம் தெளிவாகின்றது. இது பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு அல்ல. மாறாக அரசை எதிர்ப்பவர்களை ஒடுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள சட்டவரைவாகும். பயங்கரவாதிகளையும், அரச எதிர்ப்பாளர்களையும் ஒன்றாகக் காண்பித்து, அனைத்து அரச எதிர்ப்பாளர்களையும் ஒடுக்குவதற்கான திட்டமே இது. ஜே.ஆர். ஜெயவர்த்தன அன்று செய்ததையே இவர்கள் இன்று செய்கின்றனர். புதிய சட்டவரைவை எமது சுதந்திர மக்கள் சபை எதிர்க்கும்.

அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினால் கூட கைது செய்யப்படலாம். தடுப்பு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் இந்தச் சட்டவரைவின் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படுகின்றது. இது நகைப்புக்குரிய விடயமாகும். இந்தச் சட்டவரைவு நிறைவேறினால் முழுநாடும், தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தின்கீழ் இருப்பதுபோல்தான் இருக்கும் - என்றார். (எ-44)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகிடைக்க அனைவரும் கைகோர்க்க வேண்டும்!

### கர்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான கிறிஸ்தவ திருச்சபையின் முயற்சிகளுக்கு அனைத்து இலங்கையர்களும் தங்கள் பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீதி நிலைநாட்டப்படும்வரை நாங்கள் உங்களை அவதானித்துக்கொண்டிருப்போம் என்ற தொனிப்பொருளில் 21 ஆம் திகதி பரப்புரை இயக்கமொன்று ஆரம்பிக்கப்படும். அன்றையதினம் காலை 8 மணி முதல் 8.45 மணி வரை மனிதச் சங்கிலிப் போராட்டமொன்றும் முன்னெடுக்கப்படும்.


மக்கள் நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியிலோ, அல்லது தெகிவளை முதல் மொறாட்டுவை வரையிலோ அல்லது களுத்துறை முதல் பேருவளை வரையிலோ மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம். அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடுங்கள். மக்களைத் தொந்தரவு செய்யும் விதத்தில் செயற்படக்கூடாது. காலைநேரப் போக்குவரத்துக்கு குழப்பம் விளைவிக்கக்கூடாது - என்றார். (எ-இ)

**நாளை** 19.04.2023 **புதன்கிழமை** **சித்திரை 06**

சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

**அமாவாசை விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தின் நான்காம் பங்குனித் திங்கள் உற்சவத்தின்போது மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் வீதி உலா வந்து அடியவர்களுக்கு அருட் காட்சி வழங்கினாள். (ய-66)



மடு பிரதேசசெயலக பிரிவில் பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை முன்னேற்றும் நோக்கில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி பழைய மாணவர்களால் தெரிவுசெய்யப்பட்ட 125 மாணவர்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மன்/பெரியபண்டிவிரிச்சான் தேசிய பாடசாலையில் கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்பட்டது. (ய-213)



புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வு புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ய-66)





சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கரைச்சி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவினரால் "சமுர்த்தி அபிமானி" என்ற கருப்பொருளில் விற்பனைக் கண்காட்சி கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

உள்ளூர் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கிலும், உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலும், அவற்றை விளம்பரப்படுத்தும் நோக்கிலும் இந்த விற்பனைக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய-113)



யாழ். மந்துவில் றோ.க.த.க. வித்தியாலயத்தில் கல்விகற்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற மணவர்களுக்கும் க.பொ.த (சா/த) மற்றும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் அமரர் பற்குணத்தின் 27 ஆவது நினைவு தினத்தையொட்டி பணப்பரிசில்கள் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ய-9)





கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நிலைய தலைவர் பாரா. சாந்தகுமார் தலைமையில் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. (ய-20)



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவர்களுக்கு ஆசிரியர் அமரர். வை. குணானந்தனின் நினைவாக அவரது குடும்பத்தினரால் அப்பியாசக் கொப்பிகள் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப் பட்டன. (ய-9)



தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிறுவர் சேம நிகழ்ச்சித் திட்டம் கூட்டுறவு சங்கத் தலைவர் ப.செல்லத்துரை தலை மையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாணவர்களது சேமிப்புக் கணக்கில் வைப்புப் புத்தகம் மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கியால் பரிசுப் பொருள்கள் என்பன வழங்கிவைக்கப் பட்டன. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏப்ரல் 4 சர்வதேச கண்ணிவெடி அகற்றும் தினத்தை முன்னிட்டு, மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவன பணியாளர்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. (ய-214)




கருகம்பனைப் பொது அமைப்புக்கள் இணைந்து நடத்திய சித்திரை விளையாட்டு விழாவின் முதலாம் கட்டமாகத் துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி நிகழ்வு யாழ்.கீரிமலை கருகம்பனைச் சந்தியில் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.
இதில் நவாலி தெற்கைச் சேர்ந்த பாலசிங்கம் கிரிசன் முதலாமிடத்தைத் பெற்றார். (ய-66)



தவக்காலத்தை முன்னிட்டு கோப்பாய் தெற்கு தூய மரியன்னை ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் மாபெரும் குருதிக் கொடை முகாம் மேற்படி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-66)

பலாலி - ஊறெழு மேற்குச் சுன்னாகம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறி நூலகத்திற்கு கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒரு தொகுதி நூல்களைப் பொறுப்பாளர் து. ஜெயதீஸ்வரனிடம் கையளித்தார். (ய)





வரணி சமுர்த்தி வங்கிக் குட்பட்ட பிரிவுகளில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் உற்பத்திப் பொருள் கண்காட்சியும் விற்பனையும் சுட்டிபுரம் கண்ணகி அம்மன் ஆலய முன்றிலில் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது. (ய-159)



சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தமிழ்மக்களின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நிகழ்வு வட்டுக்கோட்டை அராலி தெற்கு புனாவோடை சவாரி விடந்தையில் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-66)




யாழ்ப்பாணம் நாரந்தனைப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு கனடாவைச் சேர்ந்த மிட்லான் நிறுவனத்தின் ஊழியரான சிறீராமின் 21ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருடைய நிதிப்பங்களிப்பில் யாழ் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் லயன் [illegible] நா.தனேந்திரனால் உலருணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய)



[illegible] அறநெறிப் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி [illegible] பிள்ளையார் ஆலய வீதியில் கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதியை உயிருடன் தின்றனவா மூட்டைப்பூச்சிகள்?

## அமெரிக்கா சிறையில் அதிர்ச்சி

வொஷிங்டன், ஏப். 18

அமெரிக்காவில் உள்ள அட்லான்டா நகர சிறைச்சாலையில் உயிரிழந்த ஒருவரை "பூச்சிகளும் மூட்டைப்பூச்சிகளும் உயிரோடு சாப்பிட்டுவிட்டன" என்று அவரது வழக்கறிஞர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.


லாஷான் தாம்சன் என்பவர் சிறு குற்றமொன்றுக்காக சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது பரிசோதனைகளில் தெரிய வர மாவட்ட சிறையின் மனநல பிரிவில் வைக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு சிறையறையிலிருந்து அவர் நினைவிழந்த நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது. இந்தநிலையில் தாம்சன் வழக்கறிஞர், "மூட்டைப் பூச்சிகள் அவரை உயிருடன் தின்றதால்தான், அவர் இறந்துவிட்டார். இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

மேலும் கூறுகையில்,

"தாம்சன் வைக்கப்பட்டிருந்த சிறை சுகாதாரமற்று மூட்டைப்பூச்சிகள் நிறைந்திருந்தன. அவரை மூட்டைப் பூச்சிகள் உயிருடன் தின்றிருக்கின்றன. அவரின் உடல் நிலைமை மோசமடைந்து வந்ததை தடுப்புக்காவல் அதிகாரிகளும் மருத்துவப் பணியாளர்களும் கவனித்தபோதும் அவருக்கு உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சிறைப் பதிவுகள் காட்டுகின்றன. தாம்சனுக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின்படி, அவரின் உடலில் எந்தக் காயங்கள் இல்லாவிடினும் கடுமையான மூட்டைப்பூச்சி தொற்றுக்குள்ளாகியிருந்த அறிகுறிகள் தெரிகின்றன. மரணத்துக்கான காரணம் இன்னும் உறுதிசெய்யப்படவில்லை- என்றார். இதுகுறித்து மூட்டைப்பூச்சிகளில் நிபுணத்துவம் பெற்ற பூச்சியி யல் வல்லுநர் கூறுகையில்,

மூட்டைப்பூச்சி கடித்தால் பொதுவாக மரணம் ஏற்படாது. ஆனால் மூட்டைப் பூச்சிகள் பரவியிருக்கும் இடத்தில் நீண்டகாலம் இருப்பது கடுமையான ரத்த சோகையை ஏற்படுத்தும். இதற்கு சிகிச்சையளிக்காமல் விடுவது மிகவும் ஆபத்தானது- என்றுள்ளார். (ச-இ)




# துருக்கியில் மீண்டும் நேற்று நிலநடுக்கம்!

அங்கரா, ஏப். 18

துருக்கியின் தென்மேற்குப் பகுதியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் 7 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் புவியியல் பகுதியில் துருக்கி அமைந்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 45 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், துருக்கியின் தென்மேற்குப் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று அந்த நாட்டின் புவியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நிலத்துக்கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம்கொண்டிருந்தது என்று அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# தென்கொரியா - அமெ. இணைந்து ஏவுகணைக் கண்காணிப்புப் பயிற்சி



சியோல், ஏப். 18

வடகொரியா இந்த மாதம் மட்டும் 12 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ள நிலையில், வடகொரியாவுக்குப் போட்டியாக ஏவுகணைத் தடுப்புப் பயிற்சிகளை அமெரிக்காவுடன் இணைந்து முன்னெடுத்துள்ளது தென் கொரியா.

வடகொரியாவின் ஆயுத மற்றும் அணுவாயுத அச்சுறுத்தல்களுக்கு எதிராக அண்மையில் அமெரிக்காவும் தென்கொரியாவும் ஜப்பானும் இணைந்து போர்ப்பயிற்சிகளை வடகொரிய - தென்கொரிய எல்லைப் பகுதிகளில் நடத்தின. இந்த நிலையில் இதற்குப் பதிலடியாக 12 ஏவுகணைகளை நேற்றுமுன்தினம் ஏவி சோதனை நடத்தியது வடகொரியா. 'வடகொரியாவுக்கு எதிரான இராணுவக் கூட்டணி நெருப்புடன் விளையாடுகின்றது' என்றும் வடகொரியா எச்சரித்திருந்தது.

இந்த நிலையிலேயே, வடகொரியாவுக்குப் பதிலடியாக ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் இணைந்து ஏவுகணைக் கண்காணிப்புப் பயிற்சிகளை முன்னெடுத்துள்ளனர்.

'கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கண்காணித்து அழிப்பது இந்தப் பயிற்சியின் பிரதான நோக்கம்' என்று தென் கொரியா தெரிவித்துள்ளது. (ம)

## ஈரானில்

# ஹிஜாப் அணிவதை கண்காணிக்க கமரா

தெஹ்ரான், ஏப். 18

ஈரானில் பொது இடத்தில் ஹிஜாப் அணியாத பெண்களைக் கண்காணிப்பதற்காக கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என அந்தநாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. இதில் 300 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 15ஆயிரம் பேர் வரை கைதுசெய்யப்பட்டனர்.

போராட்டக்காரர்களில் 400 பேருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது.

ஈரானின் இந்தச் செயலுக்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்தன. எனினும், ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் வன்முறையில் ஈடுபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்குவது தொடரும் என்று ஈரான் அரசு தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் பொதுஇடங்களில் ஹிஜாப் அணியாது செல்லும் பெண்கள் கமரா மூலம் கண்காணிக்கப்பட்டு விளைவுகள் குறித்து எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்பப்படும் என அந்தநாட்டு பொலிஸார் கூறியுள்ளனர். (ச-இ)

# சோபகிருது தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்




ஆர்ப்பாட்டமின்றி சாதிப்பவர் நீங்கள். உங்கள் ராசிக்குப் பத்தாவது ராசியில் சோபகிருது வருடம் தொடங்குகிறது. ஆகவே உங்களின் சாதனைகள் தொடரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும்.

வைகாசி, ஆனி மாதங்களில் திடீர்த் திருப்பங்கள் ஏற்படும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வாரிசு உருவாகும். ஆனி, ஆவணி மாதங்களில் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். வரவேண்டிய பணம் வந்துசேரும்.

மார்கழி, தை, மாசி மாதங்களில் பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். புது முடிவுகள் எடுப்பீர்கள். சிலருக்கு நல்ல வேலை கிடைக்கும். வெளிநாட்டிலிருக்கும் உறவினர், நண்பர்களால் திடீர் திருப்பங்கள் ஏற்படும். விலையுயர்ந்த அணிகலன்கள் வாங்குவீர்கள். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும்.

22.04.2023 முதல் வருடம் முடியும் வரை ராசியில் அமர்கிறார் குரு. ஆரோக்கியத்திலும் பேச்சிலும் கவனம் தேவை. தம்பதிக்கு இடையே விட்டுக் கொடுத்துச் செல்லவும். சில செலவுகள் இரட்டிப்பாக வாய்ப்பு உண்டு. சிக்கனம் அவசியம்.

ஆண்டு தொடக்கம் முதல் 25.08.23 வரை மற்றும் 20.12.23 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 11ல் சனிபகவான் அமர்கிறார். கௌரவப் பதவிகள் தேடி வரும். வெளிநாட்டினரால் திடீர்த் திருப்பங்கள் ஏற்படும். தடைப்பட்ட வேலைகளை முழுமூச்சுடன் முடிப்பீர்கள்.

வருடப் பிறப்பு முதல் 7.10.23 வரை உங்கள் ராசிக்குள் ராகு நிற்பதால் உடல் உபாதைகள் வந்து நீங்கும். முன்கோபமும் ஏற்படலாம். யோகா, தியானத்தில் ஈடுபடுவது சிறப்பு. 8.10.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 6ல் கேதுவும், 12ல் ராகுவும் நுழைவதால் தைரியம் கூடும்.

2.11.2023 முதல் 30.11.2023 வரை சுக்ரன் 6ல் மறைவதால் கணவன் -மனைவிக்குள் கருத்து மோதல் எழும்; 17.11.2023 முதல் 27.12.2023 வரை செவ்வாய் 8ம் வீட்டில் அமர்வதால் உறவினர்களுடன் மோதல், செலவினங்கள், பயணம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வைகாசி, ஆனி, ஆவணி மாதங்கள் சாதகமாக இருக்கும்; வேலைச்சுமையும் அதிகரிக்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு உங்களை திட்டமிட்டு செயற்படவைக்கும்; சிக்கனத்தின் அவசியத்தை உணர்த்துவதாகவும் அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவான வெற்றியை நோக்கி இலங்கை




கொழும்பு. ஏப். 18

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம் பெறும் சுற்றுலா அயர்லாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டநேர நிறைவில் இலங்கை அணி முன்னிலை வகிக்கிறது.

இரண்டு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடருக்காக இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டிருக்கும் அயர்லாந்து அணி பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்த இலங்கை அணி வலுவான நிலையில் காணப்படுகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி குசால் மெண்டிஸ் மற்றும் அணித்தலைவர் கருணாரத்னவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் முதல்நாள் ஆட்டநேர நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 386 ஓட்டங்களைக் குவித்திருந்தது. கருணாரத்னா 176 ஓட்டங்களையும் குசால் மெண்டிஸ் 140 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். தொடர்ந்து இரண்டாம் நாளுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணிக்கு சந்திமல் மற்றும் சமரவிக்ரம ஆகியோர் சதங்களைப் பெற்றுக்கொடுக்க முதலாவது இன்னிங்ஸுக்காக 591 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது இலங்கை அணி.

இதன்படி தனது முதலாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய அயர்லாந்து அணி இலங்கை அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. அந்த அணி சார்பாக மக் கொலம் அதிகபட்சமாக 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இரண்டாம் நாள் ஆட்டநேர நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது அயர்லாந்து அணி. இதன்மூலம் 474 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 3 விக்கெட்டுக்கள் மட்டுமே கைவசமுள்ள நிலையில் அயர்லாந்து அணி 'பொலோ ஒன்' நிலைக்கு தள்ளப்படவே அதிக வாய்ப்புக்கள் காணப்படுகிறது. பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய சுழற்பந்துவீச்சாளரான பிரபாத் ஜயசூரியா 5 விக்கெட்டுக்களையும் விஸ்வ பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (ஒ-ரி1)

## கோல்வ் போட்டி மரச்சரிவால் இடைநிறுத்தம்



அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் நடைபெற்ற யூ.எஸ். மாஸ்ரர்ஸ் கோல்வ் சுற்றுப்போட்டியானது மைதானத்தின் பல இடங்களிலும் ஏற்பட்ட மரச்சரிவுகளால் இடைநிறுத்தப்பட்டது.

உலகில் இடம்பெறும் மிக முக்கியமான சுற்றுப்போட்டிகளில் ஒன்றாகக் கருதப்படும் இக் கோல்வ் போட்டியானது அகஸ்டாவில் இடம்பெற்றது. இதில் போட்டியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் எனப் பலரும் கூடியிருந்த பிரதேசங்களில் மரங்கள் திடீரென சரிந்து விழத் தொடங்கின. இதனால் போட்டிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. எனினும் போட்டியாளர்களுக்கோ பார்வையாளர்களுக்கோ எந்தவிதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. போட்டி நடைபெற்ற அன்றையதினம் வீசிய பலத்த காற்றினாலே இந்த இடர் ஏற்பட்டது.

கோல்வ் உலகில் பிரசித்திபெற்ற வீரரான ரைகர் வூட்ஸ் உட்படப் பல வீரர்களும் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி1)

# அதிரடிக்கு பஞ்சமில்லாத ஆட்டத்தில் பெங்களூரை வீழ்த்தியது சென்னை




ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை வீழ்த்தி த்ரில் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை சென்னை அணிக்கு வழங்கினார் பெங்களூர் அணித்தலைவர் டூ பிளஸிஸ். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஹெய்க்வாட் 3 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சிராஜ் வீசிய பந்தில் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரகானே கொன்வேயுடன் இணைந்து சிறந்த இணைப்பாட்டமொன்றைக் கட்டியெழுப்பினார். அணி 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஹசரங்கவின் சுழலில் சிக்கி நேரடியாக இலக்கு தகர்க்கப்பட்டு ஆட்டமிழந்து வெளியேறினார் ரகானே. இவர் 20பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்தும் களத்தில் அதிரடி ஆட்டத்தைக் கைவிடாமல் ஆடிய கொன்வே, சிவம் டுபேயுடன் மீண்டுமொரு சிறந்த இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார். இருவரும் இணைந்து பெங்களூர் பந்துவீச்சாளர்களை பதம் பார்த்தனர். டுபே இராட்சத சிக்ஸர்களை பறக்கவிட கொன்வேயும் அவருக்கு நிகராக அதிரடி ஆட்டத்தை ஆடினார். சென்னை அணி 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் கொன்வேயின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இவர் 6 சிக்ஸர்களையும் 6 பவுண்டரிகளையும் விளாசி 45 பந்துகளில் 83 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தார். அவரைத் தொடர்ந்து டுபேயும் 5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். மத்திய வரிசை வீரர்களும் தமது பங்களிப்பை வழங்க சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 226 ஓட்டங்களை குவித்தது. பந்து வீச்சில் பெங்களூர் அணி சார்பாக பந்து வீசிய அனைத்து பந்துவீச்சாளர்களும் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். விஜய்குமார் விசாக் 4 ஓவர்களில் 62 ஓட்டங்களை வாரி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

227 என்ற மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பெங்களூர் அணி முதலாவது ஓவரிலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கோலியை இழந்தது. ஆகாஸ் சிங் வீசிய யோர்க்கர் பந்தில் நேரடியாக இலக்கு தகர்க்கப்பட்டு அவர் பவிலியன் திரும்பினார். அதே ஓவரிலேயே அடுத்துவந்த லொம்றரின் ஆட்டமிழப்பு வாய்ப்பைத் தவறவிட்டார் தீக்ஷன. வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத லொம்றர் இரண்டாவது ஓவரிலேயே மீண்டும் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டபோதிலும் களத்திலிருந்த அணித்தலைவர் டூ பிளஸிஸ் தற்காப்பு ஆட்டத்தைக் கையிலெடுக்காமல் மக்ஸ்வெல்லுடன் இணைந்து ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரின் காட்டடியின் உதவியுடன் 10 ஓவர்கள் நிறைவில் பெங்களூர் அணி 121 ஓட்டங்களைக் குவித்தது. ஆட்டத்தின் பதினோராவது ஓவரை வீசிய தீக்ஷன, டூ பிளஸிஸ் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை மீண்டுமொருமுறை தவறவிட்டார்.

இணைப்பாட்டமாக 126 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் தீக்ஷனவின் பந்திலேயே டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் மக்ஸ்வெல். இவர் 8 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக வெறுமனே 36 பந்துகளில் 76 ஓட்டங்களை விளாசியிருந்தார். அடுத்த ஓவரில் மக்ஸ்வெல்லின் பாணியிலேயே டூ பிளஸிஸும் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். இவர் 4 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 33 பந்துகளை எதிர்கொண்டு 62 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அடுத்து வந்த கார்த்திக் மற்றும் சஹ்பாஸ் அஹமட் இணை சிறிது நம்பிக்கையளித்தது. இறுதி 3 ஓவர்களில் பெங்களூரின் வெற்றிக்காக 35 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பந்து வீச அழைக்கப்பட் மதீச பத்திரண சிறப்பாகப் பந்துவீசி அஹமட்டின் விக்கெட்டை கைப்பற்றியதோடு 4 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக்கொடுத்து ஆட்டத்தின் போக்கை மாற்றினார். அடுத்து வந்த வீரர்கள் யாரும் பெரிதாக ஓட்டங்களைப் பெறாததால் ஆட்டம் சென்னை அணியின் பக்கம் மாறியது. கடைசி ஓவரில் 19 ஓட்டங்கள் தேவைப்பட மீண்டும் சிறப்பாகப் பந்து வீசிய பத்திரண 10 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து சென்னை அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். முடிவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 218 ஓட்டங்களைப் பெற்று, 8 ஓட்டங்களால் தோல்வியடைந்தது ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி. துடுப்பாட்டத்தில் பிரகாசித்த சென்னை வீரர் கொன்வே ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ,ரி1)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரெம் (STEM) மற்றும் ஸ்ரீம் (STEAM) கல்வி அறிமுகம்

**ஸ்ரீம்(STEAM) கல்வி அறிமுகம் என்பது, நிஜ உலகின் பிரச்சினைகள் பற்றி பரந்துபட்டு சிந்திப்பதற்கு மாண வர்களை ஊக்கப்படுத்தும் ஒன்றிணைந்த கற்றல் அனுகுமுறையாகும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் ஆகிய துறைக ளின் கூட்டிணைவாகும். ஜார்ஜெட் யக்மன் (Georgette Yakman) என்பவர் ஸ்ரீம் கல்வியை முதன்முதலில் 2006ஆம் ஆண்டு அறிமுகம் செய்தார்.**

ஆ.நித்திலவர்ணன்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கல்வியியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்




ஸ்ரீம் என்பது எழுதப்பட்ட கலைத்திட்டம் ஒன்றல்ல. இதுவொரு கற்றல் அணுகுமுறையாகும்.

**ஸ்ரெம் கல்வி மற்றும் ஸ்ரீம் கல்வி இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு**

ஸ்ரெம் கல்வி மற்றும் ஸ்ரீம் கல்வி இரண்டுமே விஞ்ஞான எண்ணக்கருக்களை அணுகுவதற்கான வழிமுறையாகும். ஆனால், ஸ்ரெம் கல்வி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன்திறன்களை மட்டும் பிரயோகிக்கின்றது. ஆனால் ஸ்ரீம் கல்வி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன்திறன்கள் மற்றும் மென்திறன்கள் இரண்டையும் பிரயோகிக்கின்றது. மேலும் ஸ்ரீம் கல்வி, ஸ்ரெம் எண்ணக்கருக்களை புரிந்துகொள்வதற்காக கூட்டுணர்வை ஊக்கப்படுத்துகின்றது.

**ஸ்ரீம் கல்வியின் இயல்புகள்**


- 21ஆம் நூற்றாண்டின் பணியாட்களுக்கு தேவையான திறன்களான பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் திறனாய்வுச்சிந்தனை என்பவற்றை கட்டியெழுப்புவதற்கான கல்விசார் மாதிரிகையாக ஸ்ரீம் கல்வி கருதப்படுகின்றது.
- எதிர்காலத்தில் மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்கு ஸ்ரீம் கல்வி அவசியமாகும்.
- ஸ்ரீம் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், விஞ்ஞானம், பொறியியல் மற்றும் ஆய்வு ஆகிய பரந்துபட்ட துறைகளில் மாணவர்களை, வேலைவாய்ப்புக்காக தயார்ப்படுத்துகின்றன.
- ஸ்ரீம் துறையில் கற்றவர்கள், பரந்துபட்ட தொழில்துறையில், வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

**ஸ்ரீம் கல்வியின் நன்மைகள்**

- நிஜ உலகின் பிரச்சனைகளை வெளிக்காட்டுகிறது.
- நேரடிக்கற்றலை உள்ளடக்குகிறது.
- பாடவிடயம் தொடர்பான சுயாதீன கண்டறிதலை ஊக்குவிக்கின்றது.
- கூட்டுணர்வை கற்பிக்கிறது.
- கல்வியில் சமத்துவத்தை ஊக்குவிக்கிறது.
- பின்வரும் மென்திறன்களை விருத்தி செய்கிறது.

1. தொடர்பாடல்
2. திறனாய்வுச்சிந்தனை
3. படைபாற்றல்
4. பிரச்சனை விடுவித்தல்
5. கூட்டுணர்வு
6. ஈடுபாடு மற்றும் ஊக்கல்

- கற்றல் அனுபவங்களை தனியுரிமையாக்குதல்




**ஸ்ரீம் கல்வி கற்பித்தல் முறைகள்**

- செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல்
- கணித்தல் சிந்தனை
- மார்க்கர் ஸ்பேசஸ் (Marker spaces)

**ஸ்ரீம் கற்றல் செயற்பாட்டுக்கான உதாரணங்கள்**

- DIY பொறியியல்
- The bridge building challenges explores engineering ideas
- Build a Volcano (விஞ்ஞானம்)
- Apple oxidation (விஞ்ஞானம்)



## 'உள்ளம் சஞ்சிகை'யின் இலக்கிய விழா

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, 'உள்ளம் சஞ்சிகை' வழங்கிய பொற்கிழி பரிசளிப்பும், இலக்கிய விழாவும் வவுனியா மாநகரசபைக் கலாசார மண்டபத்தில் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோலகலமாக இடம்பெற்றது. (ய-110)



## 'கூடி வாழ்வோம்' நூல் வெளியீடு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடகத் துறை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய "கூடி வாழ்வோம்" எனும் நாடக நூலின் வெளியீட்டு விழா கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நூலைக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் [illegible] வெளியிட்டு வைக்க முதற்பிரதியை ஓய்வுநிலை விரிவுரையாளர் வ.சி. குணசீலன் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி ஆற்றினார். நூலின் நயப்புரையை யாழ்.கல்வி வலய நாடகத்துறை ஆசிரிய ஆலோசகர் யோ.யோண்சன் ராஜ்குமார் நிகழ்த்தினார். (ய66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகளால்தான் நாடு வங்குரோத்தடைந்தது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 18**

**இலங்கையின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு, ஆட்சியாளர்களின் கொள்ளைகள்தான் காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தெற்காசிய அறக்கட்டளை மற்றும் ஏசியன் கொலிஜ் ஒவ் ஜேர்னலிசம் (ஏசிஜே) ஆகியவற்றின் ஏற்பாட்டில், யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதர் மதன்ஜீத்சிங் நினைவுச் சொற்பொழிவு இணையவழி வாயிலாக நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு காலத்தில் தெற்காசிய பிராந்தியத்தில் வளர்ந்த நாடாக இலங்கை திகழ்ந்தது. கல்வியிலும், சமூக வளர்ச்சியிலும் மிகவும் முன்னேறி இருந்தது. ஆனால் காலப்போக்கில் அடுத்தடுத்து நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்புகள், வன்முறைச் சம்பவங்கள் போன்றவற்றால் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

காலனி ஆதிக்கத்திடமிருந்து எங்களுடன் சுதந்திரம் பெற்ற, அயல் நாடான இந்தியா இன்று எந்தளவு வளர்ந்துள்ளது? எங்கள் நாட்டின் தற்போதைய நிலை என்ன?

வருமானம் ஈட்டித்தந்த சுற்றுலாத்துறை முடங்கியுள்ளது. தொழிற்றுறை சீரழிந்து விட்டது. நிர்வாகம், பொலிஸ், நீதிமன்றம் என அரசாங்கத்துறைகளில் எங்கு பார்த்தாலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது. கல்விமுறை நெருக்கடியில் சிக்கியுள்ளது. அரசாங்க நிர்வாகத்தின் ஒட்டுமொத்தத் தோல்விதான் இவற்றுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே மக்கள் பிரதிநிதிகளாக, அமைச்சர்களாக, முக்கியமான பொறுப்புகள் வகிப்பவர்களாக உள்ளனர். கொள்ளையிலும், கொலையிலும் ஈடுபட்டவர்கள் அமைச்சரவையில் இருக்கிறார்கள். ஆட்சியாளர்களின் கணக்கற்ற கொள்ளைகளே, இலங்கையின் தற்போதைய திவால் நிலைக்கு முக்கியமான காரணம். ஆட்சியாளர்கள் அதிகார வெறியிலும், கொள்ளையடிப்பதிலும்தான் குறியாக இருக்கிறார்களே தவிர, மக்கள் நலனை நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை.

நாட்டு நலன்மீது அக்கறை கொள்ளக்கூடிய நவீன, அறிவு பூர்வமான, அறநெறியும் நேர்மையும் கொண்ட தலைவர்கள் இப்போது இலங்கை நாட்டுக்குத் தேவைப்படுகிறார்கள். அடுத்த தலைமுறைக்குத் தேவையான இலங்கையைக் கட்டமைக்கும் தலைவர்கள் அவசியம். இந்தப் பணி மிகவும் கடினமானது தான். இதில் இளைஞர்கள், கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள், நலன் விரும்பிகள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். தெற்காசிய பிராந்தியத்தில் அயல் நாடுகளின் பேருதவியும் இலங்கையின் வளர்ச்சிக்கு அவசியம் - என்றார். (ஏ-இ)

## கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஏப்.18

பதுளை, தல்தென்ன திறந்தவெளி சிறைச்சாலை புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 9 கைதிகள் நேற்று அதிகாலை தப்பிச்சென்றுள்ளனர் என்று சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தப்பிச் சென்றவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், ஏனையோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். சிறு குற்றங்களுடன் தொடர்புடைய இளையோரே இந்தச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஏ-இ)

## பழுதடைந்த விமானம் இலங்கை வந்தடைந்தது

கொழும்பு, ஏப்.18

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் விமான நிலையத்தில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தரித்து நின்ற ஸ்ரீலங்கன் விமானம் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. இந்த விமானம் கடந்த மாதம் 15ஆம் திகதி இலங்கைக்குப் புறப்படவிருந்த நிலையிலேயே தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தனது பயணத்தை தொடர முடியாத நிலைமைக்கு உள்ளானது.

இந்த விமானத்தில் 5 குழந்தைகள் உட்பட 218 பயணிகள் மற்றும் 17 பணியாளர்கள் காணப்பட்டனர். அதன்பின்னர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் 6 பொறியியலாளர்கள் குழு அங்கு சென்று இந்த விமானத்தை சீரமைத்தது. இதையடுத்தே விமானம் நேற்றுக் காலை கட்டுநாயக்கவை அடைந்தது. (ஏ-இ)

## போலி 5,000 ரூபாவுடன் நபரொருவர் கைதானார்

5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் மோதர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்து 27 போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாரின் சோதனை நடவடிக்கை மேற்கொண்ட போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் இரத்தினபுரியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்று தெரிவித்த பொலிஸார், சந்தேக நபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, தற்போது பண்டிகைக் காலம் என்பதால் போலி நாணயங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (ஏ-இ)

## தோல்வியை மறைக்க அரசு பொய்ப்பரப்புரை செய்கிறது!

கொழும்பு, ஏப்.18

எதிர்க்கட்சி தலைவர் உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தில் இணையத் தயாராகி வருகிறார்கள் என்ற செய்தியை அரசாங்கத்தைச் சார்ந்த குழுக்கள் பரப்பி வருகின்றன. அவற்றை முற்றாக நிராகரிக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ராஜபக்ச அரசாங்கத்தின் நீட்சியாக இருக்கும் தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தை விடவும் மோசமான பாதாளத்துக்கு எமது நாட்டைத் தள்ளும் என்று ஆரம்பம் முதலே எச்சரிக்கின்றோம். விரைவில் இந்த அரசாங்கத்தின் தோல்வியடைந்த வேலைத்திட்டம் அப்பட்டமாக வெளிப்படும். மொட்டுக் கட்சியின் நிழல் அரசாங்கமாக மாறிவரும் இந்த அரசாங்கம் ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பான போலியான செய்திகளைப் பரப்பி தனது தோல்வியான நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது. முதலாளித்துவ கும்பல்கள் மற்றும் பிற்போக்கு சக்திகளின் ஒரே சவால் எமது ஐக்கிய மக்கள் சக்தியாகும். அந்தக் கும்பல் ஒன்றுபட்ட ஐக்கிய மக்கள் சக்தியை சேதப்படுத்துவதற்கு எந்த விலையையும் கொடுக்கத் தயாராகியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஒரு குழு அரசாங்கத்துடன் இணையப் போகின்றது என்று ஆரம்பத்தில் போலியான செய்திகளை வெளியிட்ட கும்பல் பிரதமர் பதவிக்காக எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் இணையும் என்பதை தங்களின் சமீபத்திய உத்தியாகப் பயன்படுத்துகிறது.

நாட்டின் அப்பாவி மற்றும் ஆதரவற்ற மக்களின் வாழ்க்கையை மகிழ்ச்சி அடையச் செய்வதற்கு நேரத்தை ஒதுக்குவதற்குப் பதிலாக வெறுப்பும், பேரம் பேசுவதும் சதிகள் மற்றும் உல்லாசப் பேரரசர்களின் அரசியலை மட்டும் முன்னெடுப்பதும் அபத்தமானது - என்றார். (ஏ-இ)

## இலங்கைக் குரங்குகளுக்காக அமெரிக்காவும் விண்ணப்பம்!

கொழும்பு, ஏப். 18

இலங்கையிலிருந்து சுமார் ஒரு லட்சம் குரங்குகள் சீனாவுக்கு வழங்கப்படவுள்ள நிலையில், அமெரிக்காவும் இலங்கைக் குரங்குகளைப் பெறுவதற்கு ஆர்வம் காட்டியுள்ளதாக அறியமுடிகின்றது.

இலங்கையில் மனிதனின் வாழ்க்கை முறைக்கும் விவசாயத்துக்கும் குரங்குகள் தொல்லையைக் கொடுக்கின்றன. சுமார் 30 லட்சத்துக்கும் அதிகளவான குரங்குகள் பல்கிப்பெருகியுள்ளன என்ற தகவல்கள் அண்மையில் வெளியிடப்பட்டன.

இதையடுத்து சீனாவின் மிருகக்காட்சிச்சாலைகளுக்காக அந்த நாட்டின் வேண்டுகோளின் அடிப்படையில் சுமார் ஒரு லட்சம் குரங்குகள் விரைவில் சீனாவுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த நிலையிலேயே இலங்கைக் குரங்குகளைப் பெறுவதற்கு அமெரிக்காவும் ஆர்வம்காட்டியுள்ளது என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், எத்தனை குரங்குகளை அமெரிக்கா கேட்டுள்ளது என்ற தகவல் வெளியிடப்படவில்லை. (ம-44)

## சியம்பலாபிட்டிய விபத்தில் காயம்

கொழும்பு, ஏப். 18

நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய வாகன விபத்தில் காயமடைந்தார். இந்த விபத்துஇராஜாங்க அமைச்சரின் வீட்டுக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அமைச்சரின் சொகுசு வாகனம் வீதியை விட்டு விலகி சுவரில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரி காயமடைந்து அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிறுகாயங்களுக்குள்ளான இராஜாங்க அமைச்சர் தற்போது கொழும்பு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைகள் இன்றி எல்லைகள் நிர்ணயம்!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, ஏப். 18

எல்லை மீள் நிர்ணயத்தில் இடம்பெற்ற தன்னிச்சையான செயற்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புகள் எழுத்துமூல பரிந்துரைகளை மாவட்டச் செயலருக்கு அனுப்பி அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என்று கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணய வரைவு அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமையும் மக்களிடத்தே அதிருப்தி நிலவுவதையும் அவதானிக்கமுடிகிறது. கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் எவையும் பெறப்படாமலேயே இந்த எல்லை மீள் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களுக்கும் கிராமங்களுக்கும் இடையிலான நிலத்தொடர்பு, நிர்வாகத் தொடர்பு, சமூக ஊடாட்டங்கள், போக்குவரத்து உள்ளிட்ட காரணிகள் கருத்திற்கொள்ளப்படவில்லை.

இது மாவட்டத்தின் சமூக, அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரத்தன்மையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய பாதிப்புக்கள் தொடர்பில், அந்தந்த வட்டாரங்களைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்கள் தங்களின் எழுத்துமூல பரிந்துரைகளை எல்லை மீள் நிர்ணயக் குழுவின் மாவட்டத் தலைவரான மாவட்டச் செயலருக்கு முகவரியிட்டு, தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு பிரதியிட்டு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைப்பதன் மூலம், உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கமுடியும் - என்றார். (ச-113)

# ஓய்வூதியரின் அங்கத்தவருக்கு சிகிச்சை, இறப்புக் கொடுப்பனவு

சாவகச்சேரி ஏப் .18

பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தினரின் அங்கத்தவர்கள் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெறும் காலத்துக்கு, அல்லது இறப்பு ஏற்படின் அதற்கு உரிய கொடுப்பனவு வழங்க நிதியம் முன்வந்துள்ளது.

அதற்கமைய சிகிச்சைபெறும் அங்கத்தவர்கள் சிகிச்சை பெற்றதற்குரிய மருத்துவச் சான்றிதழை சமர்ப்பித்து கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கலாம். அதேபோன்ற மரணமடைவோரின் அங்கத்துவ காலத்தை கருத்திற்கொண்டு உரிய சான்றிதழ்களை சமர்ப்பித்து உரித்தாளி கொடுப்பனவைப் பெறலாம். அதேவேளை அங்கத்தவர்கள் நலன்கருதி அந்தந்த கிளையினர் வாரத்தில் ஒருநாள் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்மராட்சிப் பிரதேச கிளையினர் பிரதேச செயலக வளாகத்தில் பிரதி திங்கட்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இந்தச் சந்திப்பு இடம்பெறுகிறது. (ச-9)

# மஹிந்தவே தலைவர் சாகர திட்டவட்டம்!



கொழும்பு, ஏப். 18

மஹிந்த ராஜபக்ச என்ற தலைவருக்கு ஈடு இணையாக எவரும் இல்லை. அவரே பெரமுன கட்சியின் தலைமைப்பதவியில் தொடர்வார் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பெரமுனவின் ஊடக சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது கட்சியின் புதிய தலைவர் நியமனம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எமது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சதான். அவருக்கு மாற்றீடு இல்லை. அன்றும் இன்றும் என்றும் அவர்தான் எங்களுக்குத் தலைவர் என்று சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார். (ம-44)

# ஏப்ரல் கொடுப்பனவு: விநியோகம் ஆரம்பம்

சாவகச்சேரி, ஏப். 18

முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான ஏப்ரல் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

கொடுப்பனவுப் பட்டியல்களை பிரதேசசெயலக சமூக சேவைகள் அலகு அனுப்பிவைத்துள்ளது. அதற்கமைய நேற்று திங்கட்கிழமை முதல் தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கிகளில் கொடுப்பனவு விநியோகிக்கப்படுகிறது. கொடுப்பனவை நேரில் வருகைதந்து பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் பிரதேசசெயலகத்தில் உரிய சான்றிதழைப்பெற்று கொடுப்பனவைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

# நாணயமாற்றுப் பெறுமதி: டொலர் நேற்று ரூ.327!

கொழும்பு, ஏப். 18

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், டொலருக்கு நிகரான நாணய மாற்றுப் பெறுமதி நேற்று 327.02 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, யூரோவின் நாணய மாற்றுப் பெறுமதி 360.46 என்றவாறாகப் பதிவாகியுள்ளது. (ம)


# உடல் அசைவு மாதம் விழிப்புணர்வு இன்று!

சாவகச்சேரி ஏப்.18

சுகாதாரத் திணைக்களத்தின் உடல் அசைவு மாத நிகழ்ச்சித் திட்டத்துக்கமைய விழிப்புணர்வு நடைபவனி மற்றும் சைக்கிள் பவனி ஆகியவை இன்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பேரணியில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினருடன் பாடசாலை மாணவர்கள், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்கவுள்ளனர். காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பாக பேரணி ஆரம்பித்து ஏ-9 வீதியூடாக சாவகச்சேரி பேருந்து நிலையம் வரை சென்றடையவுள்ளது.

நாட்டில் உடல் அசைவின்றி (சராசரியான இயக்கத்தை விடவும் குறைவாக) பல்வேறு நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் சுகாதாரத் திணைக்களத்தால் இந்த மாதம் உடல் அசைவு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்தக் காலப்பகுதியில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்தப் பேரணிகள்முன்னெடுக்கப்படுகின்றன. (ச-9)



# மதுபோதையில் அட்டகாசம் கிளிநொச்சி மக்கள் அச்சம்!

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும், மதுப்பாவனையாளர்களின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது என்றும் இதனால் இரவுவேளைகளில் வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் மதுப்பாவனையாளர்களின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. இதனால் வழிப்பறிகள், கொள்ளைகள் உள்ளிட்டவை அதிகரித்துள்ளன. இரவு வேளைகளில் அவசர தேவைகளுக்குக் கூட வெளியில் செல்வதற்கும் அச்சப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தருமபுரம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் கம்பத்துக்கு பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி சேதப்பட்டுள்ளது.

மக்கள் நாளாந்தம் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் நிழற்குடை பிடுங்கியெறியப்பட்டுள்ளது. கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி அலுவலகத்துக்குச் சொந்தமான ஆசிரியர் விடுதிகள் பலவருடமாக கைவிடப்பட்டுள்ள நிலையில் அந்தக் கட்டடத்தை மதுப்பாவனையாளர்கள் பயன்படுத்தி கலாசார சீரழிவை ஏற்படுத்தி வருகின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து குற்றச்செயல்களைத் தடுக்க வேண்டும் என்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம் பிற்போடல்

22.04.2023 அன்று நடைபெற இருந்த ஆண்டுப் பொதுக்கூட்டம், கணக்கறிக்கைகள் பூரணம் அடையாமை காரணமாகப் பிற்போடப்படுகிறது.

புதிய திகதி உறுப்பினர்களுக்கு காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.** (CR/39658)AH-1

**லோ.துஷிகரன்**
**செயலாளர்.**

# பதவி வெற்றிடம்

## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்
(பதிவு இல:HA/5/JA/1180)

மேற்படி ஆலய சப்த தள இராஜ கோபுரத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத் திருப்பணி வேலைகளுக்கு பின்வரும் வெற்றிடங்கள் நிலவுகின்றன. மேற்கூறப்பட்ட தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொறியியலாளர்** (Chartered Engineer)
தகைமைகள் :- பொறியியலாளராகவும் இராஜ கோபுர கட்டுமானத் துறையில் கள அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்:**
தகைமைகள் :- தொழில்நுட்ப சான்றிதழ் உடையவராகவும், இராஜ கோபுர கட்டுமானத் துறையில் கள அனுபவம், தொழில்நுட்ப அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான தகைமையுடையோர் 01.05.2023 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சுயவிபரக் கோவை, கல்வித் தகைமை, அனுபவம் சார்ந்த சான்றிதழ்களுடன் கீழே தரப்பட்டுள்ள ஆலய முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் / செயலாளர்
வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்
வரணி இயற்றாலை,
வரணி.

**குறிப்பு:-**
மேற்படி பதவிகளுக்கான கடமைகள் மற்றும் வேதனம் உள்ளிட்ட விடயங்கள் அனைத்தும் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**மேலதிக தகவல்களுக்கான தேவை ஏற்படின்:**

**செயலாளர் - 077 2710 893**
**பொருளாளர் - 076 308 1048**

**தொடர்புகொள்ளவும்.**

**செயலாளர்**
**ஆலய பரிபாலன சபை.**

(CR 39662)A-1

# மரண அறிவித்தல்

## பிரம்மஸ்ரீ அண்ணாச்சாமி ஐயர் பிறேமச்சந்திரக் குருக்கள்



பிறப்பு 25.07.1959
இறப்பு 17.04.2023

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ அண்ணாச்சாமி ஐயர் பிறேமச்சந்திரக் குருக்கள் நேற்று (17.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி ஐயர் - இலட்சுமி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகரட்ணசர்மா -நாகலட்சுமி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், உமாவின் பாசமிகு கணவரும், நர்த்தனசர்மா, பார்க்கவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை தியான்கடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/ 24509)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 24 . 12 . 1940
மறைவு 20 . 03 . 2023

கடந்த (20.03.2023) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் நாகராஜா இராஜலக்சுமி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (19.04.2023) புதன்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனநிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**211/32, கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS 24514) A-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 23.10.1948
இறப்பு 17.04.2023

## நாகலிங்கம் கமலநாதன்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் வட்டுவினி, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கமலநாதன் நேற்று (17.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலநாதன் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை திலகவதி தம்பதியரின் மருமகனும், தில்லைநாதன், அமிர்தாம்பிகை, அமிர்தகௌரி, சிவசிதம்பரம், சிறிரங்கநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், வித்தகி, தேசிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தமிழ்வாணன், சுசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மானசி, மேகவி, கிருத்திகன், காருண்யா, கிருதிலயா, மனோலயன், வேனுலயன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2023) முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வட்டுவினி, இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24516) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருது வழங்கல்




கிளிநொச்சி, ஏப். 18

குளோபல் நொலேஜ் கம்பஸ்ஸின் 7ஆவது விருது வழங்கும் விழா கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அதன் இயக்குநர் வரதீஸ்வரன் கஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் இரவீந்திரகுமார் நவரத்தினம் பிரதம அதிதியாகவும், கல்விக் கூட்டுறவு சிக்கன கடனுதவி வங்கியின் வலய முகாமையாளர் குணசேகரன் சுரேன், இலங்கை வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் மதனன், கைம்ஸ் யாழ். நிறுவனத்தின் முகாமையாளர் எழில்ராஜன், ஆங்கில ஆசிரியர் கிரிசாந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி, மல்லாவி, புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய இடங்களில் இயங்கி வரும் இந்த நிறுவனம், அங்குள்ள மாணவர்களுக்கு கணினி மற்றும் ஆங்கில கற்கைகளைக் கற்பித்து வருகின்றது.

விருது வழங்கும் நிகழ்வில், கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும், சிறந்த அடைவு மட்டத்தை எய்திய மாணவர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன. (ஒ-இ)

# உள்ளகப்பொறிமுறை வெற்றியளிக்கும்

கூறுகிறார் பிரதமர்

கொழும்பு, ஏப். 18

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் அரசின் உள்ளகப் பொறிமுறை வெற்றியளிக்கும் என்று நம்புவதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உள்ளகப் பொறிமுறைக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'இதை எதிர்ப்பவர்கள் தங்களுடைய கருத்துக்களை பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும். அதற்கான காரணத்தையும் அவர்கள் விலாவாரியாக முன்வைக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேறும் போது அதன் ஊடாகத்தான் அரசு அந்தப் பணிகளை முன்னெடுக்கும். இந்த அரசினுடைய நடவடிக்கை வெற்றியளிக்கும் என்று நம்புகின்றேன் - என்றார்.

(ஒ-5-22)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் (20.05.2023) ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவரும், வைத்திய அத்தியட்சகருமான வைத்தியகலாநிதி சி. குமரவேள் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

புதிய அரசியல் யாப்பு விதிகளுக்கு அமைவாக தேர்தல் நடைமுறைகள் மூலமே நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளமையால் வேட்பு மனுக்களை நலன்புரிச் சங்க அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட வேட்பு பத்திரங்களை 06.05.2023 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விபரங்களுக்கு நோயாளர் நலன்புரிச்சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**ந. பாலசந்திரன்,**
**செயலாளர்,**
**தொ.இல. 021 227 0195**
**18.04.2023**

(CR/39659)AH-1

**வைத்திய கலாநிதி**
**சி. குமரவேள்,**
**தலைவர்.**

## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணம் மாநகரசபை**
**வியாபார நிலையங்களில் கட்டணக்கழிவகற்றல் சேவை**

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு தகுதி வாய்ந்த சேவை வழங்குனரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 18.04.2023 - 02.05.2023 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 2.30 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி உள்ளடங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணத்தினை 02.05.2023 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை கடமை நாட்களில் யாழ் மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பார்வையிடலாம்.

கேள்வி வைப்புப்பணமாக ரூபா 20000 பணமாக செலுத்துதல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை 02.05.2023 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 02.05.2023 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**யாழ் மாநகரசபை,** (CR/39660)AH-1 **18.04.2023**

## மரண அறிவித்தல்



**சிதம்பரப்பிள்ளை செல்லம்மா**

துன்னாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்லம்மா நேற்று (17.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூரியர் சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்வமோகன் (ஜேர்மனி), மதன்மோகன் (ஓய்வுநிலை மதுவரி அத்தியட்சகர்), மதிவதனி (ஆசிரியர் - துன்னாலை வடக்கு மெ.மி.த.க. பாடசாலை), வசந்தகுமாரன் ( கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலினி (ஜேர்மனி), பொன்பாதராணி, கோபிநாத் (ஆசிரிய ஆலோசகர்- வடமராட்சி வலயம்), ராதாகுமாரி (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மஜீந்தன் (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), மதுஷா (BSc. Hons in IT, Specia lization in IT ), மயூரி ( Final Year Medical Student, Faculty Of Medicine, University Of Jaffna), குமரன் (Higher Diploma In Physical Education, University Of Jaffna) , ரமிலா (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதர், நடராசா, கதிரவேற் பிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கக்கடை ஒழுங்கை,**
**துன்னாலை, கரவெட்டி.**

**தகவல்:**
**சி.மதன்மோகன் (மகன்)**
**(ஓய்வுநிலை மதுவரி அத்தியட்சகர்)**
**077 538 7266**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 23 . 10 . 1941



**மறைவு** 15 . 04 . 2023

**செல்லக்கண்டு கிட்டுணு**

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு கிட்டுணு கடந்த (15.04.2023) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், தவமலரின் அன்புக் கணவரும், கனகசிங்கம், தனபாலசிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி (பவளம் - சுவிஸ்), குணசிங்கம், அன்னலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், இராசம்மா, காலஞ்சென்ற மகாலிங்கம், காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற ருக்குமணி, மகேசு, கமலாதேவி, கமலா, காலஞ்சென்ற நாகலிங்கம் (சுவிஸ்), யோகம்மா, திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும், நவநீதராசா (ரவி), ராஜேந்திரகுமார் (வவி-சுவிஸ்), றாஜினி (றஜி), கோகிலன் (அப்பன்-பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதர்சினி (சுஜாதா), நளினி(கவி), அஜந்தினி (சோபா-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி, சுரேகா (சுவிஸ்), ரவீந்திரன் (ரவி), தனுசிகா (பிரான்ஸ்), மகிந்தன், செல்வகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், நிரோசன், காலஞ்சென்ற வரதன் (நிக்சன்), தனுசிகா, றெமினா (சுவிஸ்), றெமிசன் (சுவிஸ்), றொயான்ஸ் (சுவிஸ்), வேணுஜன் (அபி), விஷாந், அத்விக் (பிரான்ஸ்), பர்சித (பிரான்ஸ்), திபிசாத் (பிரான்ஸ்), கிரிசாளன் (கிரி), ஆகாஷ், அஜீனா, சர்மித் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

(CS 24515)A-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**074 056 9294**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து பண்ணை நாகபூஷணி அம்மன் சிலையை நேரில் சென்று வழிபட்ட இந்து அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள். (ஒ)

## அம்மன்...

நல்லை ஆதீனத்தில் நேற்றுமாலை இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடிக் கலந்துரையாடல் நடத்தினர்.

பண்ணையில் சித்திரைப் புத்தாண்டு அன்று வைக்கப்பட்ட நாகபூஷணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு யாழ்ப்பாணப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்றில் அறிக்கையும் தாக்கல் செய்துள்ளனர். சிலை வைக்கப்பட்டமையால் இன, மத குழப்பம், சமாதானச் சீர்குலைவு ஏற்படக்கூடும் எனவும் அறிக்கையிட்டிருந்தனர். இதன் அடிப்படையில் இன்றையதினம் சிலைக்கு உரிமைகோராவிடின் அது அகற்றப்படும் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர். இதன்போது, மேற்படி சிலையை அகற்றுவதற்கு நீதிமன்றில் இன்று தோன்றி ஆட்சேபம் தெரிவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்படும்போது அனைத்துச்சட்டத்தரணிகளையும் முன்னிலையாகுமாறும் இந்து அமைப்புக்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,5,26,20)

## அனைத்துச்...

'தீவகத்துக்கான நுழைவாயிலான பண்ணைச்சுற்றுவட்டத்துக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள நாகபூஷணி அம்மன் சிலை தொடர்பான வழக்கு நீதிமன்றில் இன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதில் இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து முன்னிலையாகுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்து அமைப்புக்களுக்கு ஆதரவாக அனைத்துச் சட்டத்தரணிகளும் நீதிமன்றில் முன்னிலையாக முன்வரவேண்டும்' என்றார் சரவணபவன். (அ-ஒ.இ)

## இனவழிப்புக்கு...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதியைப் பெற்றுக்கொடுத்தல், அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்த வலியுறுத்தல், சமகாலத்தில் இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த அரச திணைக்களங்களால், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தல், அட்டைப் பண்ணைகள், இறால் பண்ணைகள் அமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் கடல்வள அபகரிப்பைக் கைவிடக் கோரல், சீன நாட்டின் முதலீட்டாளர்களுக்கு கிளிநொச்சியின் காணிகளைத் தாரைவார்ப்பதைத் தடுத்து நிறுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையால் மேற்கொள்ளப்படும் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-ஒ.125)

## தமிழர்...

வதும் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முழு அடைப்புப்போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு முன்வைக்கப்படுகின்றது. அன்றையதினம் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு நாடாளுமன்றத்தினுள் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறியல் போராட்டத்தை முன்னெடுப்பார்கள். இந்தப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவை வழங்கும்.

அதேநாளில் தமிழர் தாயகம் முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு எதிர்ப்பு வெளியிடுவது மாத்திரமல்லாமல் இங்கு முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பை வெளிக்காட்டுவது இதன் நோக்கமாகும். இந்தப் போராட்டத்துக்கு முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகளும் ஆதரவை வழங்கவுள்ளன - என்றார்.

கல்வியன்காட்டிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக்காலை கூடினர். இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், தமிழ்த் தேசியக் கட்சியினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ.5)

## பாம்புக்கடியால்...

கிழவன்குளம் பகுதியில் வசித்து வந்த மாற்றுத்திறனாளியான முன்னாள் போராளி ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் (வயது-47) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இவரை கடந்த வியாழக்கிழமை பாம்பு தீண்டியுள்ளது. இதையடுத்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (அ-ஒ.19)

## ரயில்...

ஒருவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபரான சிவசுப்பிரமணியசர்மா (வயது-80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். மல்லாகத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் யாழ்.ராணி ரயிலுடன் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை வலி.கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஒ.20,26)

## தீயில்...

சாளரிடம் இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வலி. வடக்குப் பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்தில் பணியாற்றும் பாலகிருஷ்ணர் விஜிதா (வயது-37) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அந்தப் பெண் நேற்றுமுன்தினம் இரவு முன்னாள் தவிசாளரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். பின்னர் தீயில் எரிந்துள்ளார். தீ அணைக்கப்பட்டதையடுத்து கிணற்றினுள் குதித்தார் என விசாரணையில் தெரிவிக்கப்படுகின்றது. அவரை அங்கிருந்து மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபோதிலும் நேற்று மாலை உயிரிழந்தார்.

இறந்த பெண் கணவனைப் பிரிந்து தன் மகளுடன் வாழ்ந்து வந்தவர் என்று தெரிவித்துள்ள பொலிஸார் இறப்புத்தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் நேற்று இரவு முன்னெடுத்த இறப்பு விசாரணையின்போது பெண்ணின் உறவினர்கள் இறப்பில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம.26)

## முழுமையாக...

13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த நாட்டின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத இனக்கலவரம் வெடிக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நல்லிணக்கத்தை 3 கட்டங்களாக ஏற்படுத்துவதற்காக அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார். அதில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் உள்ளடங்குகின்றது என்று குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் விமல் வீரவன்ஸவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை எக்காரணம் கொண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்த அனுமதிக்கமாட்டோம். அமைச்சரவை உபகுழுவை நியமித்து 13 ஐ நடைமுறைப்படுத்த ரணில் அரசு வகுத்துள்ள வியூகத்துக்கு எமது கடும் எதிர்ப்புக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இலங்கையில் வரலாறு காணாத இனக்கலவரம் ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கின்றோம். தமிழ் மக்கள் சிங்கள மக்களைப்போல் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். அது 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக அவர்களுக்கு வேண்டிய உரிமைகள் வழங்க வேண்டிய அவசியமில்லை' - என்றார். (அ-ஒ.22)

## சந்தேகங்களைத்...

மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நல்லூரில் அமைந்துள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் நேற்று மாலை இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் செயலர் விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

13ஆவது திருத்தம் தொடர்பில் பல விடயங்களில் தெளிவின்மை இருப்பதாகத் தெரிவித்து அது தொடர்பில் விளக்கமறிவதற்கே வடக்கு ஆளுநர் இந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் மாகாண அதிகாரங்களை மீறி மத்திய அரசாங்கம் எப்படிச் செயற்படுகின்றது? அதனை எப்படித் தடுப்பது என்பது தொடர்பில் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திலிப் தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. அவரது நியமனத்தை ஆளுநர் எப்படித் தடுத்திருக்கமுடியும் என்பது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று மாகாணசபை நடைமுறையில் எழும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆளுநர் சில தெளிவுபடுத்தல்களைக் கோரிப்பெற்றுள்ளார். (அ-ஒ.5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கஞ்சா வியாபாரி நேற்றுக் கைது

கொக்குவில் பகுதியில் நீண்டகாலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர், யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 35 வயதுடைய கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் நீண்டகாலமாகக் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்து ஒரு தொகுதி கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-20-26-66)

## தேசிய அரசாங்கத்துக்கு ரணில் அழைப்புவிடுப்பார்

*அதற்கு ஒத்துழைக்கும் கோரிக்கையை முன் வைப்பேன் என்கிறார் மனோ கணேசன்*

நாடாளுமன்றம் எதிர்வரும் 25ஆம் திகதி கூடும்போது தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் முன்வைப்பார். அவரது கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு எதிரணியிடம் நானும் ஹக்கீமும் அன்றையதினம் கேட்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 'டெய்லிமிரர்' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'எதிர்வரும் 25ஆம் திகதி ஐ.எம்.எப். ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் சமர்ப்பிப்பார். அதன்பின்னர் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆதரவைக் கோருவார். அன்றையதினம் நானும் ரவூப் ஹக்கீமும் தேசிய அரசாங்கம் அமைக்க ஆதரவு வழங்குமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுப்போம்' -என்றார் மனோ கணேசன். (அ-ஒ,6)


### கார் விற்பனைக்கு

Toyata Axio Hybrid (2013)
WP KX XXXX
உடன் விற்பனைக்குண்டு.

**077 226 9909**

### வீடு விற்பனைக்கு

யாழ். அரியாலையில் 1 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. ( மாம்பழம் சந்தியிலிருந்து 1 1/2 km இற்கு அப்பால்)

**076 651 7648**

### பணிப்பெண் தேவை

மாட்டீன் வீதியில் உள்ள வீடொன்றில் ஒரு வயதுக் குழந்தையைப் பராமரிப்பதற்குப் பணிப்பெண் தேவை.
**வயது 30 - 50**
**வீட்டில் தங்கியிருப்பவர்கள் விரும்பத்தக்கது.**
(CS/24510)AH-1

**077 967 2643**

### பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியிலுள்ள வீடொன்றுக்குத் துப்புரவு மற்றும் சமையல் உதவிக்கு நாளாந்தம் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை பணியாற்றக் கூடிய பெண் பணியாளர் தேவை. அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது. (CS/24508)AH-1


**077 340 3027**

### விற்பனைக்கு

Food City இற்குத் தேவையான Tempered Glass Racks (கண்ணாடி அலுமாரிகள்) விற்பனைக்குண்டு.

**077 142 9410**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 16 • 12 • 1940

மறைவு 29 • 04 • 2022

### அமரர் கந்தையா குலசிங்கம்

(மூத்த ஊடகவியலாளர் - யாழ் வர்த்தக சங்க சமாச முன்னாள் தலைவர்)

திதி:- (18.04.2023)

இவ்வுலகில்
அன்பைச் சொரிவதற்கு
ஆயிரம் உறவுகள் இருக்கலாம்.
ஆனாலும்...
உள்ளார்ந்த நேசத்தை
உன்னதமான பண்புகளை
உயர்வான ஆளுமையை
எங்களுக்கு இனிமேல் எவர் தருவார்?
உங்கள்
நினைவுகளின் வழித்தடத்தில் உருக்கமுடன்
பயணிக்கின்றோம்

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு.
(CS/500580)AH-1
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம்**
**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- **076 733 6047, 076 333 6079**
**076 733 6093**

(CS 24495) A-1

## காணி விற்பனைக்கு உண்டு

- ✱ யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
- ✱ பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- ✱ மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✱ நன்னீரூற்று
- ✱ குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- ✱ பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

**தொடர்பு:**
**077 076 0389**
**076 9119 371**
**076 7390 413**

(CS 24454) A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 • 11 • 1934

இறப்பு 05 • 04 • 2023

வயது-88

### வீரகத்திபிள்ளை சிவசம்பு கந்தசாமி

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - தேர்தல்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை, கலட்டி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, அரசடி வீதி, கொழும்பு, பிரித்தானியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திபிள்ளை சிவசம்பு கந்தசாமி (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - தேர்தல்கள் திணைக்களம் - யாழ்ப்பாணம்) கடந்த (05.04.2023) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் (பிரித்தானியா) அன்புக் கணவரும், ஞானதேவி, ஞானகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரஞ்சன் (பிரித்தானியா), நிரஞ்சலா (கனடா), சுரேஷலா , சுஜிகலா (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்தன நங்கை, சோமசேகரம், ஜெயநாயகம், துஷ்யந்தன், ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சோமசேகரம், நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பரமேஸ்வரி, தவமணி, சிதம்பரநாதன், கனகசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சேயோன், ஆர்த்தி, கிருஷ்ணவி, பிரணவி, அபிராமி, கிஷன், தீரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (20.04.2023) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு Jack Carter Pavilion, United Kingdom இல் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**00141 6844 3148,**
**077 899 6131**
(CS/24434)AH-1
தகவல்: **குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.